REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 2உ புதன் (19—10—55) ★ ★ வெளியீடு: ஐப்பசி 3உ வியாழன் (20—10—55) [இதழ் 108

ஆண் - பெண் சேர்ந்து நடிக்கத் தடை!

கல்கத்தா பல்கலைக் கழகத்தினர், 'ஆண்—பெண் மாணவர்கள் ஒன்றாகக் கலந்து நாடகங்கள் நடிக்கக்கூடாது' என்று தடை விதித்திருக்கின்றனர்.

பல்கலைக் கழக மாணவர்கள் நடிக்கும் நாடகங்களில், இனி முழுவதும் ஆண்களாகவோ, அல்லது பெண்களாகவோதான் இருப்பர். இந்தப் புதிய தடை, ஏராளமான கஷ்டங்களை விளைவிப்பதாக மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

மத்திய சர்க்கார் கல்வி இலாகா, கலாச்சார முன்னேற்றம் கருதி, மாணவர்களுக்கான நாடக அரங்கங்கள் ஏற்படுத்துமாறு கருத்தறிவித்திருந்ததாம்.

சிபாரிசுகளுக்கு எதிராக வேலை நிறுத்தம்

ஆர்ப்பாட்டங்கள்; மறியல்

இரயில்கள் நின்றன; போக்குவரத்துக்குத் தடை

இந்தியாவின் பல பாகங்களிலும் எதிரொலி

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் வெளியான பின், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்—பெரும்பாலான மாநிலங்களில், முக்கியமான நகரங்களில் எல்லாம் கடையடைப்பு, எதிர்ப்பு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் முதலியன தொடர்ந்து நடைபெற்றவண்ணமுள்ளன.

ஒரிசாவில்...

ஒரிசா மாநிலத்தில் கட்டாக் நகரில் பெரியதொரு கடையடைப்பு, மறியல், ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

புவனேஸ்வரத்தில் சட்டசபை முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் விளைவாக, சட்டசபை நடைபெற முடியாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கட்டாக் நகரில், ஆர்ப்பாட்டங்களை ஒட்டி, உயர் நீதிமன்றம் மூடப்பட்டதாகத் தகவல் தரப்படுகிறது.

பூரி நகரில், இரயில்கள் பல, ஆர்ப்பாட்டக்காரர்களால் நிறுத்தப்பட்டனவாம்.

இவையன்னியில், மாநிலமெங்குமுள்ள முக்கிய நகரங்களில் கடையடைப்பும், பள்ளி மாணவர் வேலை நிறுத்தம் போன்றவையும் நடைபெற்றிருக்கின்றன.

'ஒரிசா மாநிலத்தை அடுத்துள்ள ஒரிய மொழி வழங்கும் பகுதிகள் ஒரிசாவுடன் இணைக்கப்பட வேண்டும்' என்ற ஒரிசாவின் கோரிக்கைகளை, மாநில குழுவினர் புறக்கணித்துவிட்டதின் விளைவே இந்தக் கொந்தளிப்புக்குக் காரணமாம்.

சிங்பூம், செரிகெல்லா, கார்ஸ்வான் ஆகிய மாவட்டங்கள் ஒரிசாவுடன் இணைய வேண்டும் என்று ஒரிசா மக்கள் கோருகின்றனர். செரிகெல்லா கார்ஸ்வான் மாவட்டங்கள், முன்பு ஜமீன்களாக இருந்தவை; அவை, 1948-ல், ஒரிசாவுடன்தான் இணைக்கப்பட்டிருந்தன; ஆனால், பின்னர், சில மாதங்களுக்குள்ளாகவே அந்த மாவட்டங்களுக்கும் ஒரிசாவுக்கும் பூகோளத் தொடர்பு இல்லை எனக் கூறி, அவை இரண்டும் பிகாருடன் இணைக்கப்பட்டன; ஆனால், பூகோளத் தொடர்பு உண்டு என்பது, மயூர்பஞ்ச் மாவட்டம் ஒரிசாவுடன் இணைக்கப்பட்டதின் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக ஒரியர் வாதிடுகின்றனர்.

ஆர்ப்பாட்டத்திலும், மறியலிலும் சட்ட சபை எதிர்க்கட்சித் தலைவரும், ம. சோ. கட்சித் தலைவரும் ஈடுபட்டிருக்கின்றனர்.

மறியல்காரர்கள், எந்த ஒரு வண்டியும் நகர முடியாதபடி செய்துவிட்டனர்.

மாணவர்கள், மக்களில் எவரும் மோட்டார் போன்ற போக்குவரத்துச் சாதனங்களை உபயோகிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர்.

சட்டசபைத் தலைவர் கூட தனது காரை விட்டு இறங்கித்தான் சபைக்குச் செல்லவேண்டியிருந்ததாம்.

எந்த ஒரு காரேனும் ஓடுவதற்கு முற்பட்டால், அவற்றின் சக்கரத்தில் உள்ள காற்றினை வெளியேற்றி அவை நகர முடியாதவாறு செய்யப்பட்டனவாம்.

ஷில்லாங்கில்......

அசாம் மலைவாழ் மக்கள் சங்கத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்க, இங்கு கடைகள், பள்ளிகள் முதலியன மூடப்பட்டன; போக்குவரத்துகள் நிலைகின்றன.

'கிழக்கு மலைப் பகுதி மாநிலம் ஒன்று அமைக்க வேண்டும்' என்று அவர்கள் கோரியதாகவும், கோரிக்கையை, மாநிலக் குழு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும், அதுவே ஆர்ப்பாட்டத்திற்குக் காரணமெனவும் கூறப்பட்டது. நகர் முழுவதும் பெரிய ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அகமதாபாத்தில்

'குஜராத்தியர்களுக்கு, மாநிலக் குழு, அநீதி இழைத்துவிட்டது' என்று கூறி, 'மகா குஜராத் சிமா சமிதி' (எல்லைக் குழு) தெரிவித்திருக்கிறது.

சமிதி நடத்திய கூட்டத்தில் காங்கிரசார் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

'குழு உருவாக்கிய 16 மாநிலங்களில் 14 மாநிலங்களைக் கொள்கை அளவில் மொழி மாநிலங்களாக அமைத்திருக்கும்போது குஜராத்தி மொழி மாநிலம் அமைக்காதது ஏன்?' என்று அவர்கள் கேட்கின்றனர்.

பெல்காமில்...

இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்குவதற்காகப் போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

கூட்டம் துவங்கியதும், சிலர் கல்லெறிய முற்பட்டதின் விளைவாகப் போலீசார் உள்பட பலருக்குக் காயம் ஏற்பட்டதாம்.

பின், இரவு 10 மணி அளவில் ஒரு கோஷ்டியினர், பள்ளிக் கட்டிடம் ஒன்றிற்குத் தீயிட முற்பட்டதாகவும், ஆனால் போலீசாரும், தீயணைக்கும் படையினரும் தகுந்த சமயத்தில் வந்ததால் அந்த முயற்சி தோற்றதாகவும் தெரியவருகிறது.

நாகபுரியில்...

இந்து மகாசபைத் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான டாக்டர் என். பி. கரே, 'பம்பாயை தலைநகராகக் கொண்ட சம்புக்த மராட்டிய மாநிலம் பெறுவதற்காக மராட்டியர் இடைவிடாது போரிடுவர்; அந்தப் போராட்டம், பயங்கரமான விளைவுகளைக் கொண்டதாயிருக்குமென எச்சரிக்கிறேன்,' என்று பிரதமர் நேருவுக்கு எழுதியுள்ள திறந்த மடல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

பெங்களூரில்...

மைசூரின் முன்னாள் திவானான மிர்ஜா இஸ்மாயில், 'மைசூர் இப்போதிருப்பதைப் போன்றே தனி மாநிலமாக இருக்க வேண்டும்' என்று, கருத்தறிவித்திருக்கிறார்.

சம்பள பட்டுவாடா சட்டம்

திருத்தி அமைக்க யோசனை

புதுடில்லி, அக். 18—

இந்தியப் பேரரசு தற்போதுள்ள சம்பளப் பட்டுவாடா சட்டத்தை, வேறு சில தொழில்களுக்கும் அது பொருந்துமாறு செய்வதற்காக, திருத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

வீடு கட்டும் தொழில், மற்றும் சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் போக்குவரத்துத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமாறு செய்வதே உடனடி நோக்கம் என்று தெரிய வருகிறது.

இப்போதுள்ள சட்டம், தொழிற்சாலைகள், இரயில்வே, துறைமுக இலாகாக்கள், சுரங்கங்கள், தோட்டங்கள் இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

திருத்தப்படும் சட்டத்தினால், தாங்கள் விரும்பும் எந்தத் தொழிலுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமாறு செய்துகொள்ள மாநில சர்க்கார்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது.

'பிராவிடண்ட்' நிதிக்காக சம்பளத்திலிருந்து பிடிப்பது பற்றியும், சம்பளப் பட்டுவாடாவை ஒழுங்குபடுத்துவது பற்றியும், திருத்தச் சட்டம் விதிகளைக் கொண்டிருக்கும்.

கராச்சி, அக். 18—

அமெரிக்க இராணுவ உதவித் திட்டத்தின்கீழ், முதன் முதலாக, ரூ $1\frac{1}{2}$ கோடி பெறுமானமுள்ள கடல் கண்ணி கப்பல் பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளது; கராச்சி துறைமுகத்திற்கு அது வந்துவிட்டது.

எல்லைக் குழுக்கள் அமைக்கப்படும்

டில்லி பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லை

புதுடில்லி, அக். 18—

மாநிலக் குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் முதலாவதாக வரும் அக். 22, 23-ந் தேதிகளில் இங்கு நடைபெறவிருக்கும் மாநில முதன் மந்திரிகள் மாநாடு அமையும் என்று கூறப்படுகிறது.

மாநாட்டில், மாநிலக் குழு அறிக்கையை அமுல் செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறிவதே மாநாட்டின் முக்கிய வேலை என்றும் தெரியவருகிறது.

தாலுகாக்களின் எல்லைகளை மாற்றி அமைத்துக்கொள்ளும் சிக்கல்களை மிகைப்படுத்தக் கூடாதெனவும், அவற்றை, நியமிக்கப்படும் எல்லைக்குழுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும் டில்லி அதிகாரிகள் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

டில்லியில் இப்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் மராட்டியம், பஞ்சாப் பற்றிய சிக்கல்கள்தான் தீர்க்கப்பட முடியாதனவாகத் தெரிவதாகவும், பம்பாயில்லாத மராட்டியம் தேவை இல்லை என்று திட்டமாக அறிவிப்பதாயும் கூறப்படுகிறது.

பொதுவில் டில்லிப் பேச்சுக்களில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது

மன்னருக்குப் பணிய மறுத்ததின் எதிரொலி!

தென் வியட்நாம் பிரதமர் 'டிஸ்மிஸ்'

பாரிஸ், அக். 18—

தென் வியட்நாம் பிரதமராயிருந்த நகோ தீன் தியெமை, மன்னர் பாவோ டாய், பதவியிலிருந்து நீக்கி அவருக்கு அளிக்கப்பட்டிருந்த எல்லா அதிகாரங்களையும் பறித்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

பிரதமர் தீன் தியெம், மன்னரின் கட்டளைக்குப் பணிய மறுத்ததாயும், பெரும் சர்வாதிகாரியாகத் திட்டமிட்டதாயும் குற்றஞ் சாட்டப்படுகிறார்.

அன்னும் முன்னாள் மன்னரான பாவோ டாய், தொடர்ந்து பட்டத்தில் இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு, வரும் ஞாயிறன்று, நாடு முழுமையிலும் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதற்கு, தென் வியட்நாம் சர்க்கார் ஏற்பாடுகள் செய்துவந்தது.

சிக்கல் தோன்றியதேன்?

மன்னர் பாவோ டாய், கடந்த ஓராண்டு காலமாக பிரான்சிலேயே தங்கியிருக்கிறார்; வலதுசாரிக் கட்சியைச் சார்ந்த நகோ தீன் தியெமை, அவர் பிரதமராக நியமித்தார்.

கடந்த ஏப்ரலில், அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டபோது, மந்திராலோசனை நடத்துவதற்காக பிரான்சுக்கு வரும்படி, பிரதமரை மன்னர் அழைத்தார்; ஆனால், பிரதமர், பிரான்ஸ் செல்வதற்கு மறுத்துவிட்டார்.

அதன்மீது மன்னர், பிரதமருக்கு அளித்திருந்த இராணுவ அதிகாரங்களையெல்லாம் திரும்பப் பெற்றார்; ஆனால், மன்னரின் வாரிசிடம் அதிகாரங்களை ஒப்படைக்கப் பிரதமர் மறுத்துவிட்டார்.

பிரெஞ்சு சர்க்கார் பிழைத்தது!

பாரிஸ், அக். 18—

அல்ஜீரியாவில், பிரெஞ்சு சர்க்கார் மேற்கொண்டுள்ள சீர்திருத்தத் திட்டங்களின் கொள்கைமீது, பிரதமர் பாரே அமைச்சரவைக்கு, பிரெஞ்சு பார்லிமெண்டில் ஆதரவு தரப்பட்டிருக்கிறது.

அமைச்சரவைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவாக 294 வாக்குகளும், எதிராக 258 வாக்குகளும் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் எதிர் நடவடிக்கை

காபூலிலுள்ள தனது நாட்டு தூதுவரை திருப்பி அழைக்கிறது

கராச்சி, அக். 18—

பாகிஸ்தான் சர்க்கார், காபூலிலுள்ள தனது தூதுவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளுவதென முடிவு செய்துள்ளது. [illegible] விரைவிலேயே கராச்சிக்குத் திரும்பி விடுவாரென கூறப்படுகிறது.

பக்தூன் மக்களின் விருப்பத்தைக் கேட்காமல், புதிய மேற்கு பாகிஸ்தான் மாகாணத்தில், அப்பகுதி மக்களை சேர்த்ததை ஆட்சேபித்து, பாகிஸ்தானிலுள்ள தனது தூதுவரைத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கு ஆப்கன் முடிவு செய்ததை ஒட்டியே பாகிஸ்தான் இந்த எதிர்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இஸ்ரேல் எல்லை நெடுகிலும் தனது படைகளைச் சிரியா குவித்திருப்பதாகவும், இஸ்ரேல் நாடு தெரிந்துகொள்வதற்குரிய அளவுக்குப் பெரும்படை நடமாட்டங்கள் இருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—10—'55 புதன்

பாகிஸ்தான்!

'பகற் கனவு' என்று பரிகசித்தோருக்கும், 'பாதகஸ்தான்' என்று பழித்தோருக்கும், 'விடுதலை வேட்கை, பகற் கனவாகாது' என்ற பாடத்தைப் புகட்டியது — பாகிஸ்தான் தோற்றம். தோன்றிய எட்டாண்டு காலமாக அங்கு நிலவிவரும் நிலைகள் பற்றி விருப்பு வெறுப்பின்றி, கவலையுடன் கருத்தறிவித்து வந்திருப்பவர்கள் திராவிடர் இயக்கத்தவர்தான் — தென்னகத்தைப் பொறுத்த மட்டில்.

பாகிஸ்தானுக்கு ஒரு அரசியல் சட்டம் வகுக்கப்பட்டு நிலையான ஒரு ஆட்சி முறை அமைவதை ஒட்டி, அங்கு கடந்த எட்டாண்டுக் காலமாக —குறிப்பாகக் கடந்த சமீப காலமாக எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும், அவை தீர்க்கப்படுவதற்குரிய வழிகள் குறித்தும் நாம் அவ்வப்போது இங்கு எழுதி வந்திருக்கிறோம்.

'அமைதிக்கு வழி பிறந்துவிட்டது' என்ற நம்பிக்கை சிற்சில சமயங்களில் உதயமாவதும், பின்னர் சில நாட்களுக்குள்ளாகவே அந்த நம்பிக்கை, மலைப்பட்ட மண்பாண்டமாகச் சிதறுவதுமான நிலை தொடர்ந்து நீடிப்பது, பாகிஸ்தானை 'பாதகஸ்தான்' என்று பழித்தோருக்கு, வெறும் வாயை மெல்லுவதற்குப் பதில் அவல் கிடைத்ததைப் போன்றிருக்கிறது; நமக்குக் கவலையைத் தருகின்றது.

இப்போது பாகிஸ்தானில், ஏற்கனவே, பெருகிக்கொண்டிருக்கும் அரசியல் சிக்கல்கள் போதாது என்று, இயற்கை வேறு, வெள்ளப் பெருக்கினால் பெரும் சேதங்களை விளைவித்திருக்கிறது.

பாகிஸ்தானின் கடந்த எட்டு ஆண்டுகால வாழ்வில் இதுவரை இல்லாத அளவு வெள்ளத்தினால் பெருங்கொடுமை ஏற்பட்டிருப்பது, தீர்வுகாண வேண்டிய பெருஞ் சிக்கல்களுக்கிடையில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான் தலைவர்களுக்கு மிகுந்த கவலையைத் தரக்கூடியதாகும்.

இந்தக் கவலையில் ஆழ்ந்திருக்கும் பாகிஸ்தான் சர்க்கார், மேற்கு பாகிஸ்தானில் இருந்த மாநிலங்களை எல்லாம் ஒன்றுசேர்த்து —ஒரே மாநிலமாக இணைத்து, டாக்டர் கான் சாகிப் தலைமையில் கடந்த 14-ந் தேதியன்று மேற்கு பாகிஸ்தான் முழுவதற்குமான ஒரு மாநில சர்க்கார் அமைத்திருக்கின்றனர்— பலத்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல்!

உருவாக்கப்பட்டிருக்கும் மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தின் முதன் மந்திரியாக்கப்பட்டிருக்கும் டாக்டர் கான் சாகிபின் மூத்த சகோதரரான கான் அப்துல் கபார்கானே இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்; வடமேற்கு எல்லை மாநிலத்தினர் இதனை எதிர்க்கின்றனர்.

நீண்ட காலமாக சிறையிலேயே வைக்கப்பட்டிருந்த எல்லைக் காந்தியான கான் அப்துல் கபார்கான், மேற்கு பாகிஸ்தானை ஒருருப்பாக்கும் திட்டத்தை எதிர்ப்போரின் கருத்துக்களைத் திரட்டுவதற்காக பலுசிஸ்தான் சென்றபோது, 'அங்கு நுழையக்கூடாது' என்று அந்த மாநில சர்க்கார் தடை விதித்ததும், தடையை மீறி அந்த செஞ்சட்டைத் தலைவர் நுழைந்தபோது அவர் கடந்த செப்டம்பர் திங்கள் 17-ந் தேதி கைது செய்யப்பட்டதும், பின்னர் விடுதலையானதும் வாசகர்கள் அறிந்ததே.

• சிந்தி, பஞ்சாபி, பஷ்தோ மொழிகள் வழங்கும் சிந்து, பலுசிஸ்தானம், மேற்கு பஞ்சாப், வடமேற்கு எல்லை மாநிலம் ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பது, அந்த மொழி பேசும் மக்களின் முழு ஆதரவைப் பெற்றதல்ல என்றும், பக்தூன் மக்களின் விடுதலைக் கோரிக்கையைக் கருவறுக்கவே இந்த ஏற்பாடு என்றும் எதிர்ப்பாளர்கள் காட்டும் காரணங்கள் தவறானவை என்று முழுவதுமாகத் தள்ளி விடுவதற்கில்லை.

அரசியல் நிர்ணய சபையில் உள்ள கிழக்கு பாகிஸ்தான் பிரதிநிதிகளின் கூட்டுறவுடன் ஆட்சியாளர்கள், 'இந்தத் திட்டத்தைப் பெருவாரியானவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்' என்று கூறி, திட்டத்தை அமுல் செய்ய முற்பட்டிருப்பதையும், மேற்கு பாகிஸ்தான் ஒரே மாநிலமாக இணையவேண்டுமா—கூடாதா என்பதை கிழக்கு பாகிஸ்தான் பிரதிநிதிகளின் கூட்டுறவுடன் நிர்ணயிப்பது தவறு என்றும் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

எல்லைக் காந்தியும், இதரரும், விரைவில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதை எதிர்த்துப் போராட்டம் துவங்கக் கூடும் என்று, அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்படி வளரும் நிலைகள் குறித்து அப்பகுதி மக்கள் கருத்தறிவிக்க இன்னும் சில நாள் பிடிக்கலாம். எப்படியிருப்பினும், மக்களில் விழிப்படைந்தோரில் பெரும் பகுதியினர் ஏற்காத எந்த ஒரு திட்டமும், எத்தனை பெரிய அதிகார பலத்தைப் பின்னணியாகக் கொண்டிருப்பினும், நீடித்து அமுல் செய்யப்பட முடியாத ஒன்று என்பதை, இன்று பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் உணர்ந்திருக்கவில்லை என்று கூற முடியாது.

இதற்கிடையில், பக்தூனியருக்கு சுயநிர்ணய உரிமை தர மறுத்தது, அதற்கான கோரிக்கையை நசுக்க, இந்த ஒருருப்புத் திட்டத்தின் மூலம் பாகிஸ்தான் திட்டமிட்டிருக்கிறது என்றுகூறி, மீண்டும் அண்டை நாடான ஆப்கானிஸ்தான் கோபித்துக் கொண்டிருக்கிறது; அரசியல் உறவை அறுத்துக்கொள்ள முயற்சிக்கிறது.

மேலும், காஷ்மீர் சிக்கலைச் சீக்கிரம் தீர்க்க வழிவகை கோரி கராச்சியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

மேற்கு பஞ்சாப் முழுவதும் வெள்ளக் கொடுமை; கோடிக் கணக்கில் சேதம்—இப்படி வேறு செய்திகள் கிடைக்கின்றன.

இவற்றையெல்லாம் கண்ணுறும்போது, பாகிஸ்தான் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நமக்குக் கவலைமிகுகிறது. வளரும நிலைகளை இன்னும் சற்றுப் பொறுத்திருந்து கவனிப்போம்.

'மராட்டியரே! போராட்டத்திற்குத் தயாராகுக!

ஐக்கிய மராட்டியம் கோரி பூனாவில் ஆர்ப்பாட்டம்

பூனா, அக். 16—

இங்குள்ள போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சியினர், மராட்டி மொழி வழங்கும் ஐக்கிய மராட்டிய மாநிலம் அமைக்க மாநிலக் குழுவினர் சிபாரிசு செய்யாததைக் கண்டித்து ஊர்வலம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

'சகால்' என்ற மராட்டிய பத்திரிகை, சம்யுக்த மராட்டியம் அமைவதை எதிர்த்து எழுதிவருவதைக் கண்டிக்கும் நோக்குடன், ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அந்த இதழின் பிரதிகள் சிலவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர்.

மேலும் மாநிலக் குழுவின் அறிக்கை நகல் கிடைக்காததால், 'மாநிலக் குழு அறிக்கை' என அட்டைகளில் எழுதி, அவற்றையும் தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர்.

என். வி. காட்கில் போர் முரசு

பம்பாய், அக். 17—

"மராட்டியர்களே! ஒரு பெரும் போராட்டத்திற்குத் தயாராகவிருங்கள்; உங்களுக்கென ஒரு மாநிலம் கிடைக்கக் கூடாது என்று தடுப்பதற்கான வேலைகளில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர்; அதைத் தகர்த்தெறிந்து, மராட்டிய மாநிலம் காண போர்க்களம் புகுவதற்குச் சித்தமாயிருங்கள்.

"பிரிட்டிஷாரை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்காக நாம் கையாண்ட ஆயுதங்கள் இன்னமும் நம்மிடம் இருக்கின்றன—புதிதாக, வலிமையுடன்; தேவைப்படுமாயின்—வேறு வழியில்லாவிட்டால்—நாம் அவற்றை உபயோகிக்கத் தயங்கமாட்டோம் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்;

"ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே மராட்டியர் கோரி வரும் 'சம்யுக்த மராட்டியம்' அமைக்காவிட்டால் ஆபத்தான விளைவுகள் ஏற்படும் என்பதை, ஆட்சியிலிருப்போர் உணர வேண்டும்.

"என்றாலும், இதற்கிடையில் டில்லிப் பேச்சுக்களின் முடிவுகள் என்னவாயிருப்பினும், மராட்டியர் அமைதியாக இருக்கவேண்டும்—இலட்சியத்தை அடைவதற்கான வழிகள் வகுக்கப்படும்வரை" என்று, என். வி. காட்கில் தெரிவித்திருக்கிறார்.

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட 'சம்யுக்த மராட்டிய' மாநிலமும், 'மகா குஜராத் மாநிலமும் அமைக்க வேண்டும்—எனக் கோரி, பம்பாய் எல்லா மொழி இளைஞர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சுமார் 20,000-த்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட அந்த மாநாட்டில், 'மக்கள் சபையிலும், பம்பாய் சட்டசபையிலுமுள்ள மராட்டிய உறுப்பினர்கள், குழுவின் சிபாரிசுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வண்ணம், பதவியை விட்டு விலகிக்கொள்ள வேண்டும்' என்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

'சம்யுக்த மராட்டியம்', 'மகா குஜராத்' என்ற பெயரில், இரு மாநிலங்கள் அமைக்க வேண்டும்— என்ற இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதற்காக, எல்லா மொழிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளடங்கிய 60 பேர் கொண்ட செயற் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

வறண்ட பாலைவனம் பசுஞ்சோலையாகும்!

அலைகடல் நீரோட்டங்களை அணை போட்டுத் தடுக்க முடியும்!

உலகத்தின் தோற்றத்தையே மாற்றக்கூடுமென விஞ்ஞானியின் நம்பிக்கை

ரிச்மண்ட் (கலிபோர்னியா)—

"அணுசக்தியின் உதவியால் வற்றாத கடல் நீரைக் கொண்டு வறண்ட பாலைவனங்களையும் வளங்கொழிக்கும் பசுஞ் சோலைகளாக மாற்றிவிடுவோம்,"

என்று, டாக்டர் எட்வின் எல். செப்ரோஸ்கி எனும் விஞ்ஞானி குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார் :—

"அணுசக்தியிலிருந்து மலிவாகக் கிடைக்கும் மின்சாரத்தால் இன்னும் சில ஆண்டுகளுக்குள் கடல் தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றுவது சிக்கனமாகக் கைகூடும்;

"உப்பு நீரை நல்ல நீராக மாற்றும் முறை உலகுக்கு நெடுங் காலமாகத் தெரிந்ததுதான் என்றாலும், அவ்வாறு பெருவாரியாகச் செய்வதற்குத் தக்கபடி இயந்திர சக்தி மலிவாகக் கிடைக்கவில்லை;

"அணுசக்தியால் கிடைக்கும் மின்சாரம், எண்ணெயாலும்—நிலக்கரியாலும் கிடைக்கும் மின்சாரத்தைப் போலக் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கு இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் ஆகலாம்; நிலக்கரியைக் காட்டிலும் அணுசக்தியால் மின்சாரம் தோற்றுவித்தல் உலகில் எல்லா இடங்களிலும் இலாபகரமானதாக ஆவதற்கு 20 ஆண்டு ஆகலாம்; அவ்வாறு அணுசக்தி மின்சாரம் மலிவாகக் கிடைக்க ஆரம்பமானதும், நாம் செய்யக்கூடிய காரியங்களுக்கு அளவே இல்லை; அளவிறந்த மலிவான அணுசக்தி மின்சாரத்தால் உலகத்தின் தோற்றத்தையே மாற்றலாம்;

"அலைகடலில் மறைந்தோடும் நீரோட்டங்களை அணையிட்டுத் தடுக்கவும், தட்ப வெப்ப நிலைகளை மாற்றவும், குடியிருக்க வசதியற்ற பரந்த இடங்களையெல்லாம் வாழ்வதற்கேற்ற வகையுள்ளவையாக்கவும் மலிவான அணுசக்தி மின்சாரம் வாய்ப்பளிக்கும்;

"அணுசக்தியால் உடனே செய்யக்கூடிய முக்கியமான செயல் என்னவெனில், உள்நாட்டில் மின்சாரம் தோற்றுவிப்பதற்குத் தக்க அருவிகள் இல்லாமல் வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியும், எண்ணெயும் இறக்குமதி செய்யும் நாடுகளில் அணுசக்தியால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்."

ஒரே ஒரு நாள்!

ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின், நவம்பர் இறுதி வாரத்தில் (நவ 24 முதல் 27-க்குள்) மூன்று நாட்கள் தென்னாட்டில் சுற்றுப்பயணம் செய்யக்கூடுமாம்.

சென்னை நகருக்கு ஒரு நாள் மாலை வருவார்; மறுநாள் பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டுவிடுவார்.

முதலில், அவரும் அவரது குழுவினரும் கோயம்புத்தூருக்கு வருகின்றனர்; அங்கிருந்து உதகமண்டலம் சென்று சில தேயிலைத் தோட்டங்களைப் பார்வையிடுவர்; அங்கிருந்து பெங்களூர் சென்றுவிட்டு, சென்னைக்கு வருவர்.

ரூ. 22 கோடி செலவில்

பாகிஸ்தானில் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை

டாக்கா,—

குல்னா மாவட்டத்தில், ரூ. 22 கோடி செலவில், பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை ஒன்று விரைவிலேயே நிறுவப்படுமாம்.

துவரை சாகுபடி

நடப்பு ஆண்டில் மொத்தம் 53,65,000 ஏக்கரில் துவரை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்தியா இறக்குமதி செய்த இயந்திரங்கள்

பிரிட்டன் தரும் புள்ளி விவரம்

இந்தியாவில் பிரிட்டிஷ் இயந்திர சாதன இறக்குமதி அதிகரித்திருக்கிறது சென்ற ஆகஸ்டு மாதத்தில் 56,74,000 பவுன்கள் மதிப்புள்ள இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1954 ஆகஸ்டு மாதத்தில் இறக்குமதி மதிப்பு 36,81,000 பவுன்கள்.

துணி உற்பத்தி இயந்திரங்களையும், மின்சார உர்பத்தி இயந்திரங்கள்—உபகரணங்களையும்தான், இந்தியா அதிகமாகக் கொள்முதல் செய்து வருகிறது.

சென்ற ஆகஸ்டு மாதத்தில், இறக்குமதியான மின்சார சாதனங்களின் மதிப்பு 19,21,000 பவுன்கள்.

பாய்லர்கள், எஞ்சின்கள், விவசாயக் கருவிகள், இயந்திரக் கருவிகள், டிராக்டர்கள், ஆலை இயந்திரங்கள் ஆகிய இயந்திர சாதனங்களை 37,53,000 பவுன்களுக்கு இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது.

சந்திக்க தயார்தானும்!

சீனப் பிரதமர் விளக்கம்

"சீன—அமெரிக்கா தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ளுவதற்கு உதவியாக இருக்குமென்றால், அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லசைச் சந்திப்பதற்கு, எவ்வளவு காலமானாலும் சரி—பொறுமையாகக் காத்திருப்பதற்குத் தயாராக இருக்கிறேன்," என்று, செஞ்சீனப் பிரதமர் சூ-யென்-லாய் தெரிவித்துள்ளாராம்.

சென்னை மாநிலத்தில் உணவு உற்பத்தி அதிகரிப்புக்குத் திட்டம்

'சென்ற ஆண்டில் கூடுதலான விளைச்சல் எனப் பெருமிதம்'

சென்னை, அக். 18—

1955 ஜூனுடன் முடிய, உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டங்கள் எல்லாவற்றிலுமாக 41,20,000 - ஏகர் பயன்படுத்தப் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது ; இலட்சிய அளவு 43,74,000 ஏகராகும் ; அதிகப்படி உற்பத்தி 3,48,000 டன்கள்; இலட்சிய அளவு 3,99,000 டன்கள்.

1954—55ல், மீன் இலாகா திட்டங்கள் நீங்கலாக மொத்த மாகத் திட்டமிடப்பட்ட செலவுத் தொகை ரூ. 5,37,38,000 ;

1955—56-க்கு திட்டமிடப்பட்டுள்ள செலவுத் தொகை ரூ - 6,10,64,000; பயன்படுத்தப்படும் நிலப் பரப்பின் மதிப்பீடு 49,26,000 ஏக்கர் ; அதிகப்படி உற்பத்தி மதிப்பீடு 3,92,000 டன்கள்.

1954—55ல், சென்னை மாநிலத்தில், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதாக உணவு உற்பத்தி கமிஷனர் எம் வி. சுப்பிரமணியம் குறிப்பிட்டு மேலும் சொன்னார்:—

"ஏராளமான சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. ரூ 50 இலட்சம் செலவில், வடிமுனைக் கிணறுகள் திட்டப் பரவல் பற்றி சர்க்கார் பரிசீலனை செய்கிறது ; ரூ. 10 - இலட்சம் செலவில் 50 இயந்திரக் கலப்பைகள் வாங்கி விநியோகிப்பதற்குச் சர்க்கார் உத்தேசித்துள்ளது ; சாகுபடி செய்வோர் தவணை முறையில் விலைக்கு வாங்கிக் கொள்வதற்கென ரூ. - 37,29,000 செலவில் 1,000 எண்ணெய் எஞ்சின்களும், 150 மின்சார மோட்டார்களும் வாங்கி, அவர்களுக்கு அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது."

க்ஷய ரோகத்தை ஒழிக்க முடிவு

ரூ. 2½ கோடி. செலவிடப்படும் : திட்டக் குழு ஆலோசனை

புதுடில்லி, அக். 16—

க்ஷயரோகத்தை ஒழிப்பதற்கு ரூ. 2,50,00,000 செலவில் ஒரு திட்டத்தை திட்டக் குழு ஆலோசித்து வருகிறது.

இதுவரை இந்தப் பொறுப்பு மாநிலங்களின் பொறுப்பிலேயே விடப்பட்டு வந்தது.

க்ஷயரோகம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்தவரும் நோயாளிகளுக்கு கைத்தொழில் வேலைகளும் இத்திட்டத்தின்கீழ் கற்பிக்கப்படும்.

க்ஷயரோக நோயாளிகளுக்கான காலனிகளை அமைக்க தாராளமாக நிதி உதவி அளிக்க வேண்டும் என்று மாநில சர்க்கார்கள் கேட்டுக் கொள்ளப்படுவர்.

1956 முதல் ஐந்து வருடங்களில் 12,500 க்ஷயரோகிகள் சிகிச்சை பெறுவதற்கான படுக்கைகளை இந்திய மருத்துவ மனைகளில் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்பார்வையாளர் நியமிக்கப்படுவர்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை மாநிலத்திலுள்ள ஒவ்வொரு 150 பஞ்சாயத்துக்களுக்கும் ஒரு மேற்பார்வையாளர் (ஓவர்சியர்) வீதம் 33 பேரை நியமிப்பதற்கு சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

இப்பஞ்சாயத்துக்களில் பல்வேறு வேலைகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட எஞ்சினியரிங் சூபர்வைசர்களுக்கு இவர்கள் உதவுவர்.

வட ஆற்காட்டிற்கு 6 பேரும், செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம் ஒவ்வொன்றிற்கும் தலா 3பேரும், தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்கன்னடம் ஒவ்வொன்றிற்கும் தலா 2 பேரும், மலையாளம் நீலகிரிக்கு தலா ஒருவரும் நியமிக்கப்படுவர்.

இந்த மாவட்டங்களில், 865 'மைனர்' பஞ்சாயத்துக்களும், 19 'மேஜர்' பஞ்சாயத்துக்களும் உள்ளன. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள்கொண்ட பகுதிகளுக்கு ஒருவர் வீதம், வட ஆற்காடு மாவட்டத்திற்கு 186 குமாஸ்தாக்களும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 74 பேரும், தஞ்சை மாவட்டத்திற்கு 186 பேரும் நியமனம் செய்யப்படுவதற்கு சர்க்கார் அனுமதித்துள்ளனர். இவர்கள் 'பில் கலெக்டர்' வேலையையும் செய்வார்களாம்.

சிமெண்ட் கோட்டா : சென்னைக்கு எவ்வளவு?

1955 டிசம்பருடன் முடிவடையும் கால் ஆண்டிற்கு, விவசாயத் துறைகளுக்காகப் பல்வேறு மாநிலங்களுக்கும் பிரதி மாதமும் விநியோகிப்பதற்கென 20,950 டன் சிமெண்டை இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ளனர். அதில் சென்னை—கோயம்புத்தூருக்கு 1,200 டன் சிமெண்ட் மட்டுமே கிடைக்கும்.

****

மாநில மாநாடு

ஓவியக் கண்காட்சியோடு

ஓங்குபுகழ் எய்தத்

திருச்சியில் கூடும்!

★

கண்காட்சி கவின்பெற அமைய

ஓவியங்கள் தாரீர்! ஒத்துழைப்பு நல்குவீர்!

★

கருத்துள்ள ஓவியங்களைக் களிப்புடன் தாரீர்!

வியப்புக்குரிய பொருள்களை விரும்பி அளிப்பீர்!

★

திராவிட நாட்டின்—மக்களின்—பொருள்களின்

வரலாற்று ஓவியங்களை வரைந்து தாரீர்!

★

பொன்மொழிகள் பொறித்த அட்டைகளையும் துணிகளையும் உவந்தளிக்க வாரீர்!

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்

****

தேசீய மொழிச் சிக்கல்

இலங்கை தி. மு. கழக அறிக்கை

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக ஆக்கப்படுவதற்கான வகையில் அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கோரி, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை சர்க்காரைக் கேட்டுக் கொண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில், சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கு சமநிலை கொடுக்காவிட்டால், அது, குறிப்பிட்ட ஒரு வகுப்பினரை ஒதுக்கிப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும் என்றும், எனவே அந்த நிலை ஏற்படாதவகையில் சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை வற்புறுத்தி ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்புமாறு, இலங்கை தி. மு. கழகக் கிளைகளைக் கேட்டுக் கொண்டு இலங்கை தி. மு. கழகம் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

தங்கவயலை தேசீயமயமாக்க

மைசூர் சட்டசபை தீர்மானம்

மைசூர், அக். 17—

"ஒரு சோஷலிச மாதிரி சமூக அமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு முதற்படியாக, கோலார் தங்கவயலைத் தேசியமயமாக்க வேண்டும்," என்று கோரும் தீர்மானம் ஒன்றை மைசூர் சட்டசபை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது.

தீர்மானத்தை சோஷலிஸ்டு உறுப்பினர் கோபால கௌடா கொண்டுவந்தார்.

விவாதத்திற்குப் பதிலளித்த தங்கச் சுரங்கத் தொழில் பொறுப்பேற்றிருக்கும் போலீஸ் இலாகா மந்திரி எச். சித்தவீரப்பா 'தேசியமயமாக்கும் கொள்கையையே சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது; மத்திய சர்க்காரும் அதற்கு அனுமதி தந்திருக்கிறது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கோரிய முதன் மந்திரி அனுமந்தையா, 'இது போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில், சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக—கட்சி வேறுபாடுகளைக் களைந்து ஆதரவு தருவது பாராட்டுதலுக்கு உரியது' என்றும் தெரிவித்திருக்கிறார்.

'எவருடைய சொத்தையும், கஷ்டநஷ்ட ஈடு இன்றி எடுத்துக்கொள்ளும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை' என்றும், 'தங்கவயலுக்கு தகுந்த கஷ்டஈடுதர சர்க்கார் தயாராயிருக்கும்' என்றும், மந்திரி சித்தவீரப்பா மேலும் தெரிவித்திருக்கிறார்.

செய்திச் சுருள்

★

சென்னை 31-வது வட்ட அழகிரி நினைவு மன்றம்

15—10—55 காலை 10 மணிக்கு மேற்படி மன்றக் கட்டிடத்தில், தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் நடைபெற்ற நிர்வாக உறுப்பினர் தேர்தலில், தோழர்கள் ஆ. வில்லவன் கோதை, ப. கருமுகில், அ. வ. பாண்டியன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாகூர் பகுத்தறிவுப் படிப்பகம்

16—10—55 மாலை 5 மணிக்கு கடைத் தெருவில், தோழர் எம். பி. தாஸ் தலைமையில் மேற்படி படிப்பகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் எ. எஸ் பாண்டியன் சொற்பொழிவாற்றினார்.

டில்லி இளைஞர் விழா கழகத் தோழர் தேர்வு!

டில்லியில் நடக்கவிருக்கும் இளைஞர் விழாவில் ஓரங்க நாடகம் ஒன்றில் நடிப்பதற்கு, தி. மு கழகத் தோழர் அ. கலைவாணன் (பி. எ. இறுதி ஆண்டு), அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

பம்பாய்—காந்தாரியா சால் நண்பர்கள் படிப்பகம்

8—10—55 இரவு 9-45 மணியளவில், தோழர் டி. என். பால்ராஜ் தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில் படிப்பக வரவு-செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் தோழர்கள் டி. என். பால்ராஜ், த. மு பொற்கோ, பெ. கிருட்டிணன், ஆ கமலநாதன் ஆகியோரை முறையே தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகக்கொண்ட நிர்வாக குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

வரப்பெற்றோம்

19—9—55-ல், சென்னை ஆயிரம் விளக்கு திரு. வி. க. மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களிடம், மேற்படி மன்றத்தாரால் மாநில மாநாடு நிதிக்காகக் கொடுக்கப்பட்ட ரூபாய் 51-ம் வரப்பெற்றோம் நன்றி—பொறுப்பாளர்.

திருமணம்

13—10—55-ல், தெ. ஆ. மாவட்டம் சேஷசமுத்திரம் தோழர் எ. கண்ணன்—தோழியர் ருக்மணி திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

பிறப்பு

14—10—55-ல் நாமக்கல் தி. மு. கழகத் தோழர் கா. பெருமாள் அவர்களது துணைவியார் தோழியர் இராஜம்மாள், ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; தாயும்-சேயும் நலம்.

• • •

வாணியம்பாடி தி. மு. கழகத் தோழர் இரா. காதர் அவர்களின் துணைவியார் தோழியர் அலமத்பீவி, 10—10—55ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; தாயும், சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

13—10—55-ல, கொத்தமங்கலம் தி. மு. கழகத் தோழர் வி. எ. கணேசன் அவர்களது துணைவியார் தோழியர் பாப்பா அம்மையாருக்குப் பிறந்த குழந்தைக்கு, தோழர் எம் ஆறுமுகம் தலைமையில், தோழர் எ. பி. ராசன் அவர்கள் 'தாமரைச் செல்வி' எனப் பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஆசிரியருக்குக் கடிதம்

படைகளும் — படங்களும்

ஐயா,

16—10—55 காலை புவனகிரி உயர்நிலைப் பள்ளியின் கால்கோள் விழாவிற்கு, கவர்னர் பிரகாசா வந்தபோது, தி. மு கழகத்தின் சார்பில், இந்தியை பெண்ணாகவும், டில்லி சர்க்காரை ஆணாகவும், தமிழ் நாட்டைக் கணவனாகவும், தமிழை அவன் மனைவியாகவும் வரைந்து, 'இவளுக்குத் தாலி கூட வேண்டாம் ; சும்மா வச்சுக்கோ' என்று தமிழ் நாட்டிடம் டில்லி கூறுவதாகவும், மாதம் ரூ 250-க்கு மேல் செலவு செய்பவன் 'சோஷலிச எதிரி' என்று தேபர் சொல்லுவதாகவும், கவர்னர் பிரகாசா ஆண்டிற்கு ரூ. 10 இலட்சம் சம்பளம் வாங்குவதாகவும், 'தீண்டாமை சுவரொட்டிகளை இனி ஒட்டமாட்டேனெ'ன்று பார்ப்பனர் காலில் சென்னை அரசு விழுவதாகவும், 5 ஆண்டுத் திட்டமென்னும் பசுவிடம் வடநாடு—பாலும், தென்னாடு—கழிவு நீரும் பெறுவதாகவும், அரசாங்கம் வெளியிட்ட தீண்டாமை சுவரொட்டிபோல் பெரிய அளவில் எழுதிய படங்களை, போக்குவரத்துக்கும்—பொது மக்கட்கும் இடையூறு இல்லாது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பார்த்த பலர் அவைகளைப் பாராட்டினர் ; கவர்னர் வரும் சமயம் போலீஸ் அதிகாரிகளும், காங்கிரஸ் அன்பர்களும் கூடி, வாடகை பஸ் ஒன்றை அப்படங்களுக்கு முன்னிலையில் நிறுத்தச் செய்து, தமது திறமையை எண்ணி மகிழ்ந்துகொண்டனர் ; பின்னர், சிறிது நேரத்திற்கெல்லாம், விளம்பரப் பலகைகள் காணப்படவில்லை; போலீஸ் அதிகாரிகள் அவைகளை எடுத்துச் சென்றுவிட்டனரென்று பொதுமக்கள் வாயிலாகத் தெரிய வந்தது.

கவர்னர், திரும்பி வரும்போது, அப்படங்களைப் பார்த்து தங்களை திறமையற்றவர்களென்று எண்ணி விடுவாரென்றோ, எடுத்துச் சென்றால் தனியாகப் பார்த்து படங்களை இரசிக்கலாமென்றோ போலீஸ் அதிகாரிகள் அவைகளைக்கொண்டு போய்விட்டனர் போலும் ! படைபலம் கொண்ட இவர்களை படங்கள் மிரட்டிவிட்டன !

இரா. சேதுராமன்,
புவனகிரி

கோவா கவர்னர்-ஜெனரல் பாகிஸ்தான் செல்வார்?

சூரத், அக். 18—

டாமனிலிருந்து கிடைக்கும் தகவலின்படி, கோவா கவர்னர்-ஜெனரல், டையூ, டாமன் ஆகிய திட்டுகளில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் செல்லக்கூடுமெனத் தெரியவருகிறது.

அவர், பாகிஸ்தானில் உயர்தர அதிகாரிகளைச் சந்தித்து, பாகிஸ்தானிலிருந்து கோவா, டையூ, டாமன் பகுதிகளுக்குப் பல பொருள்கள் பெறுவதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்றும், இதை ஒட்டி அவர் பாகிஸ்தான் சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடும் என்றும் நம்பப்படுகிறதாம்.

★

டையூ, டாமனில் சுராவர்த்தி

சூரத், அக். 18—

கோவா சென்றிருந்த பாகிஸ்தான் எதிர்க் கட்சித் தலைவர் எச். எச். சுராவர்த்தி, கராச்சி திரும்புகையில், டையூ, டாமன் ஆகிய திட்டுகளுக்கும் சென்றிருந்ததாக நம்பகமாகத் தெரியவருகிறதாம்.

அவர், டாமனில் சர்க்கார் ஊழியர்களிடத்திலும், முஸ்லீம்களிடத்திலும், பொதுக்கூட்டங்களிலும் பேசியதாகக் கூறப்படுகிறது.

"போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திலிருக்கும் திட்டுக்களைத் தாக்குவதற்கு எந்த ஒரு அரசாங்கத்திற்கும் அதிகாரம் இல்லை; இந்தத் திட்டுக்களில் வாழும் மக்கள் தான், தங்களை யார் ஆளவேண்டுமென்பதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்," என்று சுராவர்த்தி பேசியதாகவும் கூறப்படுகிறது.

★

'விமான, கடல் மார்க்கத்தை மூடு'

'கொள்கை மாறுவிடில் கோவா விடுதலையேது?'

டில்லிக்கு கிருபளானி யோசனை

மைசூர், அக். 18—

ஆச்சாரிய கிருபளானி அவர்கள், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், 'கோவா சம்பந்தமாகத் தாங்கள் கையாளும் கொள்கையை இந்திய சர்க்கார் மாற்றிக்கொள்ளாவிட்டால், கோவாவின் விடுதலை நாள் காலவரையின்றி ஒத்திப் போடப்பட்டதாகவே முடியும்—அசாத்தியமானதாகவும் மாறிவிடக்கூடும்' என்று குறிப்பிட்டார்.

'சர்வாதிகாரியான சலாசரை, கோவா மக்கள் மட்டும் 'சத்தியாக்கிரக'த்தின் மூலம் வென்றுவிட முடியாது; கடல், விமானப் போக்குவரத்துக்கள் மூடப்பட்டால்தான், இந்திய சர்க்காரின் பொருளாதார நிர்ப்பந்த முறைகள் வெற்றிபெற முடியும்," என்று அவர் குறிப்பிட்டார்.

10,000 தொழிலாளர்

அடையாள 'வேலைநிறுத்தம்'

கல்கத்தா, அக் 18—

கல்கத்தா பிரதேசத்தில் கிழக்கு, தென்-கிழக்கு இரயில்வேக்களைச் சேர்ந்த 10 000 சிப்பந்திகளும், குமாஸ்தாக்களும், இன்று ஒருநாள் 'அடையாள வேலை நிறுத்தத்'தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தினால் இரயில் போக்கு-வரத்து பாதிக்கப்படாதவாறு, முக்கிய சிப்பந்திகள் மட்டும் தங்கள் கடமையைச் செய்யுமாறு, தொழிலாளர் சங்கம் கோரியிருந்தது.

தென் கிழக்கு இரயில்வே மானேஜரின் போக்கைக் கண்டித்தே அவர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனராம்.

சென்ற வெள்ளியன்று, சிப்பந்திகள் மீது போலீசார் தடியடி—கண்ணீர்ப்புகை பிரயோகம் நடத்தியதற்கு, ஜெனரல்-மானேஜரின் தூண்டுதலே காரணமென்று அவர்கள் கண்டித்துள்ளனர்.

பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அதுபற்றி இரயில்வே இலாகா விசாரணை செய்யவேண்டுமென்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

பஞ்சாப் வெள்ளம்

உயிர்சேதம் பற்றி மந்திரி தகவல்

சந்திகார், அக். 18—

பஞ்சாப் மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், 314 பேர் உயிரிழந்தனர் என்று சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக நிதி மந்திரி சர்தார் உஜ்ஜயின் சிங், பஞ்சாப் மேல் (சட்ட) சபையில் தெரிவித்திருக்கிறார்.

மொத்தமாக எத்தனை பேர் உயிரிழந்தனர் என்று முழு விபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். என்றாலும், 500 பேர்களுக்குமேல் மாண்டிருக்க முடியாதெனமதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சர்க்காருக்குச் சொந்தமான நீர்ப்பாசன வாய்க்கால்கள், மின்சார நிலையங்கள் சாலைகள், கட்டிடங்கள் முதலியன வெள்ளத்தால் பாழான வகையில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் நஷ்டம் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

★

ஜம்முவில் நிலைமை

சமீபத்தில் இங்கு ஏற்பட்ட வெள்ளத்தில் 12 பேர் மூழ்கி மாண்டதாகவும், 200 கால்நடைகள் வெள்ளத்தில் இழுத்துக்கொண்டு செல்லப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சாதிமுறைக் கேடுகளைஒழிக்க!

தனது அதிகாரம் முழுவதையும் பயன்படுத்துவாராம்!

அணைக்கட்டுத் திறப்பு விழாவில் பண்டித நேரு

ரூ. 10 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பலநோக்குத் திட்டமான கோனார் அணைக்கட்டை, பீகாரில் உள்ள ஹஜாரிபாக் மாவட்டத்தில் திறந்து வைத்திருக்கிறார், பிரதமர் பண்டித நேரு.

கோனார் நதியில் கட்டப்பட்டுள்ள அந்த அணையின் நீளம் 12,670 அடி; உயரம்—160 அடி ஆகும்.

தாமோதர் நதிப் பள்ளத் தாக்குத் திட்டத்தினுள் அடங்கிய நான்கு பலநோக்கு அணைக்கட்டுகளுள் இது இரண்டாவதாகும்.

மொத்தத்தில் பல்வேறு தொழில்களுக்கு மட்டுமின்றி இந்த அணைக்கட்டினால் ஒரு லட்சத்து நாலாயிரம் ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

அணைக்கட்டினைத் திறந்து வைத்த பண்டித நேரு, சாதி முறைக் கேடுகளைக் குறித்து மிகவும் ஆவேசமாகப் பேசினாராம். 'எவரேனும் வகுப்பு வாதம், சாதிப் பாகுபாடு இவற்றில் தீவிரமாக ஈடுபட்டால் அவற்றை ஒழிக்க, தனது ஆணைக்கு உட்பட்ட அத்தனை ஆற்றலையும் ஒன்று திரட்டி போரிடத் தயங்கமாட்டேன்' என்றும் தெரிவித்தாராம்!

1955 செப். 17-ந் தேதி வரையில், 5,50,220 பேர் மொத்தம் ரூ. 11,68,00,000 பெறுமானமுள்ள தேசியத் திட்ட சேமிப்பு பத்திரங்களை வாங்கியுள்ளனர்.

வடசென்னையில்

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

★

20-10-55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம், மீனாட்சியம்மன்பேட்டை, இராமநாய்க்கன் தெருவில், வட சென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற முதலாண்டு விழா, தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

பொதுக்கூட்டம்

21—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை — சிந்தாதிரிப்பேட்டை, தருவப்ப செட்டி வீதியில், கலைக்கதிர் கழகச் சார்பில், தோழர் அ. பொ. அரசு எம்சி, தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, சுரதா ஆகியோர் பேசுவர்.

முத்தமிழ் மன்றம்

21-10-55 மாலை 6½ மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெருவிலுள்ள மேற்படி மன்றப் பணிமனையில், தோழர் மு. மனோகரன் தலைமையில், 'நாடு' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணம்

21—10—55 காலை 9 மணிக்கு, துறையூர் தோழர் அ கருப்பண்ணன் இல்லத்தில், தோழர் சண்முகம்—தோழியர் இலக்குமி சரோசா திருமணம், தோழர் பாரதிதாசன் தலைமையில் நடைபெறும் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ. பி தர்மலிங்கம், டி. பி. அழகமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை

ரூ. 80 இலட்சம் மூலதனத்துடன் துவங்கும்

சேலை, அக். 18—

வடஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் அல்லது குடியாத்தம் நகரில் சீக்கிரமே ஒரு சர்க்கரை ஆலை ஏற்படலாம் என்று தெரிய வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் தினம் 700 டன் கரும்பு சார் பிழியப்படும் என்றும் தெரிய வருகிறது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் சென்னையில் துவங்கப்படும் ஏழு சர்க்கரை ஆலைகளில் இதுவும் ஒன்றாயிருக்கும் என்றும். இந்தத் தொழிற்சாலை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுச் செலவு ரூ. 80 இலட்சம் முதல் 90 இலட்சம் வரை இருக்கும் என்றும் தெரிய வருகிறது.

தொழிற்சாலை துவங்கும் முதற்படியாக, வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாளர்களால் செலுத்தப்படும் பங்குத் தொகையாக ரூ 10 இலட்சம் மூலதனத்துடன் ஒரு கூட்டுறவு சங்கம் நிறுவப்படும் என்றும் தெரியவருகிறது

தற்சமயம் அதிகமாகக் கரும்பு விளையும் பகுதியான வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை கூட இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

அக். 23 காலை: மதுரை-சிறப்புக் கூட்டம்;
மாலை 6 மணிக்கு: முத்து படிப்பக ஆண்டு விழா பொதுக்கூட்டம்;
இரவு 10 மணிக்கு: 'நீரும் நெருப்பும்'—நாடகத் தலைமை.

24 மாலை 5 மணிக்கு: உசிலம்பட்டி பொதுக் கூட்டம்;
இரவு 8 மணிக்கு: தேவாரம்

25 காலை: தேவாரம்-திருமணம்;
மாலை 4 மணிக்கு: வண்டிப்பெரியார் பொதுக்கூட்டம்.

அரபு நாடுகளின் எதிர் நடவடிக்கை?

வட ஆப்பிரிக்காவிலுள்ள அரபு நாடுகளுக்கு எதிராகக் கையாண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளைப் பிரான்ஸ் நிறுத்தினால் ஒழிய, எல்லாப் பிரெஞ்சுப் பொருள்களையும் 'பகிஷ்காரம்' செய்வது பற்றி 13 அரபு அரசாங்கங்களும். அரபுப் பிரதேசங்களும் யோசிக்கக் கூடுமாம்.

'தம்பி'

மூன்றுமாண்டு துவக்க இதழ் பல புதிய சிறந்த பகுதிகளுடன், 25—10—55 அன்று எங்கும் கிடைக்கும்.

நிர்வாகி,
'தம்பி' அலுவலகம்,
சிதம்பரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.